**விவசாயத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்**

First Published : 14 Sep 2010 02:04:49 PM IST

திண்டிவனம், செப். 13 :   திண்டிவனம் வட்டாச்சியர் அலுவலகம முன்பு அகில இந்திய விவசாய தொழிலாளர்கள் சங்கம் மற்றும் அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் சார்பில் தமிழக அரசை கண்டித்து திங்கள்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

÷ஆர்ப்பாட்டத்தில் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள்:

÷கலைஞர் வீடு கட்டும் திட்டத்துக்கு கூடுதல் நிதியாக ஒரு வீட்டுக்கு ஒன்றரை லட்சம் ஒதுக்க வேண்டும்,புறம்போக்கில் குடிசை கட்டி வாழ்பவர்களுக்கு உடனடியாக பட்டா வழங்கப்பட்டு அவர்களையும் பயனாளிகள் பட்டியலில் சேர்க்க வேண்டுமெனவும்,மோழியனூர் தலித் பகுதியில் ஏற்பட்ட மர்ம தீ விபத்தால் வீடுகளை இழந்து கோயில் மண்டபத்தில் குடியிருக்கும் நபர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுத்து, தீ விபத்தில் இறந்த குடும்பத்துக்கு உதவிதொகை உடனே வழங்க வேண்டுமெனவும்,இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தில் பயனாளிகளை தேர்வு செய்யும் ஊராட்சி அதிகாரத்தை பறிக்ககூடாதெனவும்,தகுதியுள்ள அனைவருக்கும் தொகுப்பு வீடுகள் கட்ட கோரியும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பேசப்பட்டது.

÷விவசாய தொழிலாளர்கள் சங்க மாவட்டக் குழு சார்பில் எம்.முனியப்பன், மாதர் சங்க வட்டச் செயலர் கே.தமிழ்முரசு உள்ளிட்டோர் தலைமை தாங்கினர். தமிழ்நாடு - பாண்டி பார் கவுன்சில் உறுப்பினர் வழக்கறிஞர் ஏ.கோதண்டம் மாசர் சங்க மாவட்டச் செயலர் எஸ்.கீதா உள்ளிட்டோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

**சொட்டுநீர் பாசனத்துக்கு மானியத்துடன் கடன்**

First Published : 14 Sep 2010 02:04:31 PM IST

செஞ்சி, செப். 13: சொட்டு நீர் பாசன திட்டத்தின் மூலம் விவசாயிக்கு 5 ஹெக்டேர் வரை மானியத்துடன் கடன் வழங்கப்படும் என செஞ்சியில் நடைபெற்ற கருத்தரங்கில் தெரிவிக்கப் பட்டது.

÷செஞ்சியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் சொட்டு நீர் பாசன கடன் வழங்க கருத்தரங்கம் மற்றும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. விழுப்புரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் மற்றும் இணைப் பதிவாளர் ரேணுகாம்பாள் தலைமையில்

அண்மையில் நடைபெற்றது. கூட்டத்தில் சொட்டு நீர் பாசனக் கடன் வழங்க வேண்டிய அவசியத்தையும் கடன் வழங்குவதன் மூலம் சாகுபடி பரப்பினை அதிகபடுத்த வேண்டியதன் அவசியத்தை விவசாயிகளுக்கு அப்போது விளக்கி கூறினார்.

÷மேலும் அவர் பேசியது:

÷துல்லிய பண்ணை முறையில் சாகுபடி நிலப்பரப்பினை அதிகபடுத்தி வேளாண் உற்பத்தி திறன், பயிர்களின் தரம் உயர்த்தி அதிகப்படியான லாபத்தை விவசாயிகள் ஈட்ட முடியும்.

மேலும் தோட்டக்கலைப் பயிர்கள், பழங்கள், காய்கறி பயிர்கள், கரும்பு, மஞ்சள், மூலிகைச் செடிகள், பருப்பு வகைகள், எண்ணைய் வித்துக்கள் மற்றும் தோட்டக்கலை சாராத இதர பயிர்களுக்கும் சொட்டு நீர் கடன் வழங்கப்படுகிறது.

÷இத்திட்டத்தின் மூலம் ஒரு விவசாயி குடும்பத்துக்கு 5 ஹெக்டேர் வரை மானியத்துடன் கடன் வழங்கப்படுகிறது. மொத்த கடன் தொகையில் 53 சதவீதம் மானியமும், 65 சதவீதம் கடன் தொகையும் கடனாக வழங்கப்படும்.

÷குறிப்பாக பதிவுக் கரும்புக்கு ஆலை நிர்வாகத்தின் பரிந்துரையின் பேரில் 3 நாள்களுக்குள் கடன் வழங்கப்படும். இந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட | 9 கோடி முழுமையாக பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்றும் இதற்காக துரித நடவடிக்கை மூலம் விவசாயிகளுக்கு கடன் வழங்க வேண்டும் என வங்கி அலுவலர்களை கேட்டுக் கொண்டார்.

÷திண்டிவனம் சரக துணைப் பதிவாளர் அழகேசன், கூட்டுறவு சார் பதிவாளர்கள் ஆரோக்கியராஜ், அரங்கநாதன், எட்வர்டுபால், பி.கருணாமூர்த்தி, சுந்தரம், கண்ணன், ராஜ்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளின் கவனத்திற்கு...**

First Published : 14 Sep 2010 01:53:49 PM IST

கள்ளக்குறிச்சி, செப்.13: மின் மோட்டாரின் குதிரைத்திறன் விவரத்தை பூர்த்தி செய்து தற்போது இயங்கும் பம்புசெட் முழுமையாக திறன்மிகு பம்பு செட்டை மாற்றிக் கொள்ளுமாறு மின்வாரிய செயற் பொறியாளர் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

÷அரசு அறிவித்துள்ள திறன்மிகு விவசாய பம்புசெட் மற்றும் திட்டத்தின்கீழ் கள்ளக்குறிச்சி கோட்டத்துக்கு உட்பட்ட அனைத்து விவசாய மின் பெருமக்களும் தங்களுடைய விவசாய மின் இணைப்பு எண், சர்வே எண் தற்போது பயன்படுத்தும் மிட் மோட்டாரின் குதிரைத் திறன் உள்ளிட்ட விவரங்களை தங்களுடைய பிரிவு அலுவலகத்தில் அணுகி அங்கு வழங்கப்படும். படிவத்தினை பூர்த்தி செய்து கையொப்பமமிட்டு கொடுத்து இத் திட்டத்தினை பயன்படுத்திக் கொள்ளுமாறு மின்சார வாரியத்தின் செயற் பொறியாளர் அறிவித்துள்ளார்.

÷தற்போது இயங்கும் விவசாய பம்புசெட் முழுமையாக திறன்மிகு பம்ப்செட்டாக மாற்றித் தரப்படும். மின் இணைப்பின் அனுமதிக்கப்பட்ட மின் அளவைவிட கூடுதல் மின்பளு பயன்படுத்தி வந்தாலும் கூடுதல் மின்பளுவை எவ்வித அபராதமின்றி முறைப்படுத்து தற்போது இயங்கி வரும் குதிரைத் திறனுக்கு திறன்மிகு மோட்டார் வழங்கப்படும் என கள்ளக்குச்சி கோட்ட செயற்பொறியாளர் பி.அமலோற்பவநாதன் தெரிவித்துள்ளார்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 75.11 அடி**

First Published : 14 Sep 2010 02:35:57 PM IST

ஈரோடு, செப். 13: பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை 75.11 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 227 கன அடி வீதம் தண்ணீர் வந்தது.
அணையிலிருந்து பாசனத்துக்கு விநாடிக்கு 2,300 கன அடியும், ஆற்றில் விநாடிக்கு 700 கன அடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டுůள்ளது. அணையின் நீர் இருப்பு 13.23 டிஎம்சி.

**இந்தச் "சாயம்' வெளுத்துப்போனால்...?**

மா. ஆறுமுககண்ணன்

First Published : 14 Sep 2010 12:00:00 AM IST

அழுது கொண்டிருந்தாலும் உழுது கொண்டிரு' என்பது முயற்சி குறித்த அன்றையத் தமிழனின் அனுபவ மொழி. இன்றோ அது தலைகீழ். அதனால்தானோ என்னவோ, உழுது கொண்டிருக்கும் விவசாயிகள் அழுது கொண்டிருக்க வேண்டியதாகியுள்ளது.

ஊருக்குச் சோறிடுவதுடன் பிறரிடம் கைகட்டிப் பணியாற்ற வேண்டிய அவசியமின்றி காலந்தள்ள விவசாயமே சிறந்த தொழில் என்றிருந்த நிலைமை இன்று இல்லை. சில நேரங்களில் உழைத்த விவசாயிக்கே ஒரு வாய் சோறு கிடைக்காத நிலை. நாட்டின் பல பகுதிகளிலும் நிகழ்ந்த, நிகழும் விவசாயிகளின் தற்கொலைச் சம்பவங்களே இதற்குச் சாட்சி!

பருவநிலை மாற்றத்தால் மழையின்மை, அல்லும்பகலும் நடக்கும் மணல் கொள்ளையால் ஒட்டகங்கள் உலா போகும்படி மாறிவிட்ட ஆறுகள், தூர்வாரப்படாத குளம், பராமரிக்கப்படாத கால்வாய், ஓசைப்படாமல் உயர்ந்துவிட்ட உர விலை, கண்கட்டு வித்தைபோல அடிக்கடி ஏற்படும் மின்வெட்டு எனப் பல்வேறு காரணங்களால், ஆண்டு முழுவதும் விவசாயம் செய்தும் பயனில்லாததால், முப்போகம் விளைந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இனி எப்போதும் விளையாத துயர நிலை.

விவசாயம் வீழ்ச்சி அடைவதற்கு விளைநிலங்கள் வேகமாக அழிக்கப்படுவதும் ஒரு காரணம். செங்கல் சூளைகள், காற்றாலை நிறுவனங்கள், கோழிப் பண்ணைகள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் போன்றவை அமைக்கப்படுவதாலும் கணிசமான பரப்பிலான விளைநிலங்கள் அழிந்து வருகின்றன.

இது ஒருபுறம் இருக்க, சில பகுதிகளில் சாயப்பட்டறைகள், காகித ஆலைகள் போன்றவற்றிலிருந்து திறந்துவிடப்படும் கழிவுநீரால் விவசாய நிலங்கள் நாளடைவில் பயனற்றுப் போகின்றன. ஒன்றுக்குப் பத்தாய் பலன் தந்த நிலங்கள் ஒன்றுக்குமற்றதாய் மாறிவிடுகின்றன.

விவசாயத்தையும், விவசாய நிலங்களையும் கபளீகரம் செய்வதில் ரியல் எஸ்டேட் தொழிலுக்கு முக்கியப் பங்குண்டு. இதனால் விவசாயிகள், விவசாயக் கூலிகளின் எதிர்கால வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளது.

சமுதாயத்துக்குச் சிறிதும் பயனில்லாத பொழுதுபோக்கு அம்சமான திரைப்படங்களைத் தயாரிப்போர் தாங்கள் தயாரிக்கும் படங்களுக்கு கோடிக்கணக்கில் விலை நிர்ணயிக்க முடிகிறது. அவற்றை வாங்கித் திரையிடும் திரையரங்குகளின் உரிமையாளர்களும் இஷ்டம்போல கட்டணம் வசூலிக்கின்றனர்.

ஆனால், உயிர்வாழ அடிப்படையான விவசாயப் பொருள்களை விளைவிக்கும் விவசாயிக்கு நியாயமான விலையைக்கூட அவர்களே நிர்ணயிக்க முடியாத நிலை. இதில் ஒரு கொடுமை, அந்த விளைபொருள்களை வாங்கி விற்போர் பல மடங்கு லாபம் பார்த்து வசதி படைத்தோராக மாறிவிடுகின்றனர்.

அவற்றை விளைவிக்கும் விவசாயிகளோ பெருமூச்சு வாங்கி, ஏங்கி நிற்போராகவே வாழ்க்கையை சிரமத்துடன் நகர்த்த வேண்டிய அவலநிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

நிலத்தடி நீரை இடைவிடாமல் உறிஞ்சி உற்பத்தி செய்யப்படும் குளிர்பானங்களை 200 மி.லி. ரூ.20 கொடுத்துக்கூட அடிக்கடி வாங்கிப்பருகும் மக்கள், காய்கறிகள் கிலோ ரூ.20-ஐ தாண்டினாலே கொள்ளை விலை எனக் கூப்பாடு போடுவதுண்டு.

ஆனால், அந்த 20 ரூபாயிலும் நாலில் ஒரு பங்கு தொகைகூட விளைவிக்கும் விவசாயிக்குக் கிடைப்பதில்லை என்பதே சோகம் கலந்த உண்மை!

விவசாயம் வீழ்வதற்கு மற்றொரு முக்கியக் காரணம், விவசாயிகள் விவசாயத்தைக் கைவிட்டு மாற்றுப் பாதையைத் தேர்ந்தெடுப்பது.

மருத்துவரின் மகன் மருத்துவராகலாம். பொறியாளரின் மகன் பொறியாளராகலாம். அரசியல்வாதியின் மகன் அரசியல்வாதியாகலாம்.

அந்த வரிசையில், விவசாயியின் மகன் விவசாயி ஆவதைத்தான் மற்றவர்கள் விரும்புகின்றனர். ஆனால், அதை விவசாயி விரும்புவதில்லை.

விவசாயம் என்னாகுமோ, எதிர்காலச் சந்ததி சோற்றுக்கே திண்டாடும் நிலை வருமோ என்றெல்லாம் மிகுந்த கவலைப்படுவதாகக் கூறுவோர், விவசாயிகள் விவசாயத்தைக் கைவிடக்

கூடாது என்று அறிவுறுத்தி மேடைதோறும் முழங்குவோர் யாரும் தனது மகனோ, மகளோ விவசாயி ஆவதை விரும்புவதில்லை.

அவர்கள் சந்ததி மட்டும் மெட்ரிக் பள்ளியில் நுனி நாக்கு ஆங்கிலம் பேசி வெளிநாடுகளுக்கு வேலைக்குப் போய் கணினியும் கையுமாய் இருக்க விரும்புகையில், தங்கள் சந்ததி மட்டும் கண்ணீரும் கையில் பிடித்த கலப்பையுமாய் இருக்க விரும்புவது எந்தவகை நியாயம் என விவசாயிகள் கேட்பதில் தவறில்லையோ எனத் தோன்றுகிறது.

கடந்த காலங்களில் காலநேரமின்றி அயர்வை நினையாமல் வியர்வை சிந்திப் பாடுபட்டும், கடன் மட்டுமே தான் கண்ட பலன் என்பதால், மற்றவர்களைப்போல தனது வருங்காலத் தலைமுறையும் ஏசி அறையில், எட்டு மணி நேர உழைப்பில் வியர்க்காமல் முன்னேற வேண்டும் என்றே விவசாயிகள் மாற்றுப்பாதையைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

சற்று வசதிபடைத்த அல்லது அதிக நிலம் வைத்திருக்கும் விவசாயிகளாக இருந்தால், தனது நிலத்தின் ஒருபகுதியை விற்று மீதி நிலத்தில் கோழிப்பண்ணையோ, செங்கல்சூளையோ தொடங்கி தங்கள் பரம்பரையின் விவசாயத் தொழிலுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுகின்றனர்.

அந்தக் காலத்தில் செயற்கை உரங்களில்லை, இலவச மின்சாரமுமில்லை, பம்ப் செட்டும் இல்லை. கடன் தள்ளுபடியுமில்லை.
ஆனால், விவசாயிகளின் வாழ்வில் ஏற்றம் இருந்தது. இன்றைக்கோ எல்லாம் இருக்கிறது, ஏற்றம் தான் இல்லை.

ஒருபுறம் குறைந்துவரும் விவசாய நிலங்களின் பரப்பளவு, மறுபுறம் விவசாயத்தைக் கைவிட்டு மாற்றுப் பாதைகளைத் தேர்ந்தெடுக்கும் விவசாயிகள். **விளைவு...**வெளுக்கத் தொடங்குகிறது விவ"சாயம்'. விழித்துக் கொள்ள வேண்டிய வேளை இது!

தினமலர்

**விழுப்புரத்தில் 17ம் தேதி விவசாயிகள் குறைகேட்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 15,2010,02:36 IST

விழுப்புரம் : விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் வரும் 17ம் தேதி கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது.மாதாந்திர விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் வரும் 17ம் தேதி காலை 11 மணிக்கு விழுப்புரம் கலெக் டர் அலுவலக கூட்ட அரங் கில் நடக்கிறது. கலெக்டர் பழனிசாமி தலைமை தாங்குகிறார். விவசாயிகள், சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு கோரிக்கை மனுக்கள் வழங்கலாம்.

**சங்கராபுரம் பகுதி கிராமங்களில் காய்கறி சாகுபடி அதிகரிப்பு! விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 15,2010,02:37 IST

சங்கராபுரம் : சங்கராபுரம் பகுதியில் விவசாய வேலைகளுக்கு ஆட்கள் கிடைக்காததால் நெல் பயிரிட்டு வந்த விவசாயிகள் காய்கறி சாகுபடியில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.சங்கராபுரம் பகுதியில் விவசாயம் செய்வதற்கு தரமான நிலங்கள் இருந்தாலும் பெரிய அளவிலான ஆற்று பாசனமோ, வாய்க் கால் பாசனமோ கிடையாது. ஏரி மற்றும் கிணற்று பாசனம் மூலம் நெல் மற்றும் மணிலா பயிர் செய்து வந்தனர். கடுமையான வறட்சி காலங்களில ஏரிகள் வற்றியும், கிணறுகளில் தண்ணீர் இல்லாததாலும் பயிர் செய்ய முடியாமல் விவசாயிகள் பாதிக் கப்பட்டனர்.விவசாயத்தில் கஷ்டம், நஷ்டம் என கூறி அரசிடம் நிவாரண உதவிக்கு கையேந்துவதை இப்பகுதி விவசாயிகள் தவிர்த்தனர்.

அரசிடம் கோரிக்கை வைத் தாலும் எவ்வித முன் னேற்றமும் காணப்போவதில்லை என்பதை உணர்ந்த இப்பகுதி விவசாயிகள் மாற்று பயிர் செய்வதில் கவனம் செலுத்தி வருகின்றனர்.ஏற்கனவே போதிய ஆட்கள் கிடைக்காமல் தவித்த விவசாயிகள் தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். நெல் பயிரிடும் விவசாயிகள் அறுவடைக்கு இயந்திரங்களை பயன் படுத்தினாலும் நடவு செய்யவும், களை எடுப்பதற்கும் கூலி ஆட்களையே நம்பி உள்ளனர். களை எடுப்பதற்கும், நடவு செய்யவும் கிடைக்கும் கூலியை விட ஊரக வேலை உறுதி திட் டத்திலும், செங்கல் சூளையிலும் கூடுதலாக கூலி கிடைப்பதால் விவசாய வேலைக்கு வரும் ஆட்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது.

இந்தாண்டு சங்கராபுரம் பகுதியில் பாலப்பட்டு, மோட் டாம்பட்டி, நெடுமானூர் காட்டு கொட்டாய், பொய்குனம் பகுதிகளில் விவசாயிகள் சின்ன வெங்காயம் அதிகளவில் உற்பத்தி செய் துள்ளனர். காய்கறிகள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு குறைந்த செலவில் ஆட்களை கொண்டு சாகுபடியில் அதிக லாபம் கிடைக்கிறது.சங்கராபுரம் அடுத்துள்ள செட்டியந்தூர், விரியூர், வடசிறுவளூர், செல்லம்பட்டு உள் ளிட்ட பல பகுதிகளில் கத்தரிக் காய், வெண்டைக்காய், புடலங்காய், பாகற்காய், முருங்கைகாய், முள்ளங்கி, பச்சை மிள காய், கருணை வகைகளை பயிர் செய்துள்ளனர்.விவசாயிகள் தங்களின் குடும்ப உறுப்பினர்களை கொண்டு காய்கறிகளை அறுவடை செய்து சங்கராபுரம், அத்தியூர், மூரார்பாளையம், விரியூர் நடக்கும் வாரச் சந்தைகளில் விற்பனை செய்கின்றனர். சந்தை இல்லாத நாட்களில் சங்கராபுரம் நகரில் சைக்கிள் மூலம் காய்கறிகளை விற்பனை செய்கின்றனர். சங்கராபுரம் பகுதியில் பாரம் பரியமாக நெல் பயிர் செய்து வந்த பெரும் பாலான விவசாயிகள் கூலி ஆட்கள் பற்றாக்குறையால் காய்கறிகள் சாகுபடியில் ஆர்வம் செலுத்தத் துவங்கியுள்ளனர்.

**தொடர் மழையால் பயிர்கள் மூழ்கின**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 15,2010,02:38 IST

விழுப்புரம் : விழுப்புரம் மாவட் டத்தில் பெய்து வரும் தொடர் மழையில் பல ஏக்கர் பரப் பில் நெல் பயிர்கள் மூழ்கின. இதனால் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.விழுப்புரம் மாவட்டத் தில் பெய்து வரும் தொடர் மழையால் பல ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட் டுள்ள விவசாய பயிர்கள் மூழ்கியுள்ளன. விவசாயிகள் பருவ மழை துவங்குவதற்கு முன் நெல், சம்பா பயிர்கள் மற்றும் காய்கறி செடிகளை பயிரிட்டிருந்தனர். திடீரென பெய்த மழையில் நெல், சம்பா பயிர்கள் தண்ணீரில் மூழ்கியதால் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.

இந்த தொடர் மழையால் விழுப்புரம் அடுத்த பானாம்பட்டு, ஆனாங்கூர் பகுதிகளில் உள்ள பாலங் கள் உடைந்து தண்ணீர் அருகே உள்ள வயல்களில் பாய்ந்து பயிர்களை மூழ்கடித்துள்ளது. சங்கராபுரம், கள்ளக்குறிச்சி பகுதிகளிலும் ஏரி மதகுகள் உடையும் அபாய நிலையில் உள்ளது.தியாகதுருகம்: விழுப் புரம் மாவட்டம் தியாக துருகம் பகுதியில் கடந்த இரு தினங்களாக பெய்து வரும் கனமழையால் தெருக்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஏரி, குளங் களுக்கு நீர்வரத்து அதிக ரித்தது. கரும்பு பயிரிட்ட நிலங்களில் நீர் தேங்கியது. பருத்தி சாகுபடி செய்த விவசாயிகள் மழை ஈரத்தை பயன்படுத்தி செடி வளர தேவையான ஊட்டச் சத்து உரங்களை வயல் களில் தெளித்து வருகின் றனர். தொடர் மழை பெய் தால் நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்புள்ளது.இதனால் கிணற்றுநீர் பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகள் மகிழ்ச் சியடைந் துள்ளனர்.

**வெள்ளம்: விளை நிலங்களில் பயிர்கள் சேதம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 15,2010,02:45 IST

தலைவாசல்: சேலம் - உளுந்தூர்பேட்டை நான்கு வழிச்சாலை பணியின்போது நீரோடை மூடப்பட்டதால், கனமழையால் வெள்ள பெருக்கு ஏற்பட்டு விளை நிலங்களில் தண்ணீர் புகுந்தது.தலைவாசல், நாவக்குறிச்சி ஏரிகள் மற்றும் சிறிய ஓடைகளில் இருந்து நத்தக்கரை வழியாக செல்லும் பெரியேரி ஏரி மற்றும் வசிஷ்ட நதிக்கு நீரோடை செல்கிறது. மழை காலத்தில் நீரோடையில் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது.சேலம் - உளுந்தூர்பேட்டை நான்கு வழிப்பாதை பணிகளுக்காக, சாலை இருபுறமும் அகலப்படுத்தும் பணிகள் நடந்தது.

அப்பணியின்போது, நத்தக்கரை மெயின்ரோடு வழியாக செல்லும் நீரோடை மூடப்பட்டது. அதனால் தண்ணீர் செல்ல முடியாமல் தேங்கி நின்றது.இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு தலைவாசல் சுற்றுவட்டார கிராமங்களில் கன மழை பெய்தது. இதனால், நத்தக்கரை நீரோடையில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. தண்ணீர் செல்ல வழியில்லாததால், விளை நிலங்களில் வெள்ளநீர் புகுந்தது. நீரோடை கரைகள் உடைப்பு ஏற்பட்டதில் 50 ஏக்கரில் பயிர் செய்திருந்த கரும்பு, பருத்தி, மரவள்ளி, சோளம் உள்ளிட்ட பயிர்கள் தண்ணீரில் மூழ்கியது.தலைவாசல் சுற்றுவட்டார பகுதியில் இரு தினங்களாக கன மழை பெய்து வருவதால், நீரோடைகளில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளது.

நான்கு வழிச்சாலைக்கு தோண்டியுள்ள பள்ளத்தில் குளம் போல் தண்ணீர் தேங்கி நிற்கிறது. ஈரப்பதம் காரணமாக விஷ பாம்புகள் அதிகளவில் குடியிருப்புகளில் புகுந்து கொள்கிறது. நேற்று பட்டுத்துறை கிராமத்தில் வீட்டினுள் புகுந்த 6 அடி நீளமுள்ள சாரை பாம்பு ஒன்றை, பொதுமக்கள் ஒன்று சேர்ந்து அடித்து கொன்றனர்.

இதுகுறித்து நத்தக்கரை கிராம விவசாயிகள் பிரேம்குமார், சக்திவேல் கூறியதாவது:நான்கு வழிச்சாலை பணியின்போது, நீரோடை மூடப்பட்டது. மாற்றுப்பாதை அமைக்கப்படாததால், கனமழையில் ஏற்பட்ட வெள்ளநீர் விளை நிலங்களில் புகுந்தது. நீரோடையில் ஆக்கிரமிப்பு நிறைந்து காணப்படுவதால், பயிர்கள் சேதமடைகின்றன. மழைநீர் செல்ல வழி அமைத்து விளைநிலங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

**பட்டுக்கூடு விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 15,2010,02:42 IST

சேலம்: சேலத்தில் பட்டுக்கூடு விலை கடுமையாக உயர்ந்துள்ளதால், உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.சேலம் மாவட்டத்தில் 1,343 விவசாயிகள், 2,260 ஏக்கர்களில் மல்பரி நடவு செய்து, பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். இங்கு உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகள் சேலம், திண்டுக்கல், தர்மபுரி, கோவை, ஓசூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள அரசு பட்டுக்கூடு அங்காடியில் விற்பனை செய்யப்படுகிறது. சேலம் அணைமேட்டில் இயங்கும் பட்டு வளர்ச்சித்துறை அலுவலகத்தில் உள்ள பட்டுக்கூடு அங்காடியில் , பட்டுக்கூடுகள் நல்ல விலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதால் விவசாயிகள் தினமும் சேலத்தில் குவிகின்றனர். கடந்த ஏப்ரல் மாதத்தில் கலப்பின பட்டுக்கூடு கிலோ 200 ரூபாய்க்கும், வெண்பட்டு கூடு கிலோ 255 ரூபாய்க்கும் விற்பனையானது. நேற்று கலப்பின பட்டுக்கூடுகள் கிலோ 245ரூபாய்க்கும், வெண் பட்டுக்கூடுகள் 366 ரூபாய்க்கும் விற்பனையானது. பட்டுநூல் கிலோ 1,900 ரூபாய் வரை

விற்பனையானதால் பட்டுக்கூடு உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியடைந்தனர்.கடந்த சில மாதங்களாக மல்பெரி செடிகள் மாவுப்பூச்சி தாக்குதலால் பாதிக்கப்பட்டது. இதனால், பட்டுப்புழுக்கள் உணவின்றி அழிந்ததால், விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர்.
தற்போது மல்பெரி செடிகளுக்கு உகந்த வானிலை நிலவுவதால், பட்டுப்புழுக்களின் வளர்ச்சியும், பட்டுக்கூடுகள் உற்பத்தியும் அதிகரித்துள்ளது.பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குனர் ராஜமாணிக்கம் கூறியதாவது:பெங்களூர் மற்றும் காஞ்சிபுரத்தில் நடக்கும் பட்டுக்கூடு ஏலத்தை அடிப்படையாக கொண்டு, சேலத்தில் பட்டுக்கூடுகளின் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. மல்பெரி நடவு செய்யும் விவசாயிகளின் நலனுக்காக 2010-11ம் ஆண்டில் 33 கோடி ரூபாய் அரசு நிதி ஒதுக்கியுள்ளது. இதனை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும், என்றார்.

**செம்மை நெல் சாகுபடிசெயல் விளக்கக் கூட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 15,2010,01:57 IST

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை வேளாண் துறை சார்பில், செம்மை நெல் சாகுபடி நாற்றங்கால் தொழில் நுட்ப செயல் விளக்கக் கூட்டம் புதுப்பட்டி, பெரப்பஞ்சோலை, அரியாக்கவுண்டம்பட்டி, கரியாம்பட்டி, மங்களபுரம் ஆகிய பகுதிகளில் நடந்தது.வேளாண் உதவி இயக்குனர் இளங்கோ தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் வசுமதி, துணை அலுவலர் நாகேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பயிற்சியில், நெல் நாற்றங்கால் அமைப்பது, நடவு வயல் தயாரித்தல், சதுர நடவு முறை, கோனாவீடர் களைக்கருவியை கொண்டு களை எடுத்தல், நீர் நிர்வாகம், மேடைபாத்தி அமைத்தல், உயிர் உரமிடல் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.வேளாண் அலுவலர்கள், முன்னோடி விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர். இதற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் செய்தனர்.

**வேளாண் பல்கலையில் ஓவியப்போட்டி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 15,2010,01:57 IST

கோவை:வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையக் கட்டடத்தை, கோவையின் சின்னமாக சித்தரிக்கும் ஓவியப்போட்டி, வரும் 19ல் வேளாண் பல்கலை வளாகத் தில் நடக்கிறது.தமிழ்நாடு வேளாண் பல்கலை அறிக்கை:கோவையின் தொன்மை கட்டடமான வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய கட்டடத்தை கோவையின் சின்னமாக சித்தரிக்கும் ஓவியப்போட்டியை வேளாண் பல்கலை மற்றும் இன்டாக் நிறுவனம் இணைந்து நடத்துகின்றன. வேளாண் பல்கலை வளாகத்தில் வரும் 19ம் தேதி காலை 10.00 மணிக்கு நடக்கும் இப்போட்டியில் பள்ளி, கல்லூரி

மாணவ, மாணவியர் மற்றும் பொதுமக்களும் பங்கேற்கலாம்.ஏழு பிரிவுகளில் இப்போட்டி நடத்தப்படுகிறது."அ' பிரிவில், 1,2ம் வகுப்பு, "ஆ' பிரிவில் 3,4,5ம் வகுப்பு, இ பிரிவில் 6,7,8ம் வகுப்பு, ஈ பிரிவில் 9,10ம் வகுப்பு, உ பிரிவில் பிளஸ் 1, பிளஸ் 2 மாணவ, மாணவியரும், ஊ பிரிவில் கல்லூரி மாணவ, மாணவியரும், எ பிரிவில் பொதுமக்களும் பங்கேற்கலாம். இதில் பங்கேற்போர் தொன்மையான வேளாண் கல்லூரி கட்டடத்தை, கோவையின் உருவப்படமாக வரைய வேண்டும்.

பங்கேற்பாளர்களுக்கு வரைபட அட்டை மட்டுமே வழங்கப்படும். போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வரும் 22ம் தேதி பல்கலையில் நடக்கும், கட்டடத்தை கோவையின் சின்னமாக அறிமுகப்படுத்தும் விழாவில் பரிசுகள் வழங்கப்படும். விழாவில், கலெக்டர் உமாநாத், மேயர் வெங்கடாசலம், மாநகர போலீஸ் கமிஷனர் சைலேந்திரபாபு, மாநகராட்சி கமிஷனர் அன்சுல்மிஸ்ரா உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.போட்டியில் பங்கேற்க விரும்புவோர் பெயர் பதிவு செய்ய 0422 - 661 1322, 93631 03457 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப் பட் டுள்ளது.

**தேயிலை ஏலத்தில் வரத்து குறைவு: தரத்துக்கு மட்டுமே விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 14,2010,02:42 IST

குன்னூர் : குன்னூர் தேயிலை ஏலத்தில் மிக்குறைந்த அளவு வரத்து இருந்தும், கிராக்கி தென்படவில்லை; தரமான தூளுக்கு மட்டுமே விலை கூடியது.
குன்னூர் தேயிலை ஏல மையத்தில் விற்பனை எண் 36க்கான ஏலம் நடத்தப்பட்டது. மொத்தம் 11.89 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு இருந்தது; இலை ரகம் 7.95 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 3.94 லட்சம் கிலோ அடங்கும். ஏற்றுமதி வர்த்தகத்தை பொறுத்தவரை பாகிஸ்தான், ரஷ்ய நாட்டு வர்த்தகர்கள் கணிசமான அளவு தேயிலை தூளை வாங்கினர்.
இதுநாள் வரை பெரியளவில் பங்களிப்பு வழங்காமல் இருந்த ஆந்திரா, கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரா உட்பட உள்நாட்டு வர்த்தகர்கள் ஏலத்தில் பங்கேற்றனர்; இருப்பினும், தரமான தூளுக்கு மட்டுமே கூடுதல் விலை கிடைத்தது.

அனைத்து ரக தூளின் விலையும் கிலோவுக்கு 2 ரூபாய் குறைந்தது; விற்பனைக்கு வந்த தேயிலை தூளில் 10 சதவீதம் தேக்கமடைந்தது.
சி.டி.சி., ரகத்தில் ஹோம்டேல் தேயிலை தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு அதிகபட்சம் கிலோவுக்கு 135 ரூபாய் விலை கிடைத்தது; 780க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன; ஆர்தோடக்ஸ் ரகத்தில் சாம்ராஜ் தேயிலை தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு அதிகபட்சம் 190 ரூபாய் விலை கிடைத்தது; 30க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன.

இலை ரக விற்பனையில் சாதாரண ரக தூளுக்கு 32 -38 ரூபாய், சிறந்த ரக தூளுக்கு 80 - 122 ரூபாய், டஸ்ட் ரகத்தில் சாதாரண ரக தூளுக்கு 33-43 ரூபாய், சிறந்த ரக தூளுக்கு 90 - 130 ரூபாய் விலை கிடைத்தது. விற்பனை எண் 37க்கான ஏலம் வரும் 16,17 தேதிகளில் நடத்தப்படவுள்ளது. மொத்தம் 12.86 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது. இதில், இலை ரகம் 8.87 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 3.91 லட்சம் கிலோ அடங்கும். இது கடந்த ஏலத்தை விட 97 ஆயிரம் கிலோ குறைவு.

இந்த வார ஏலத்தில் விற்பனைக்கு வந்த தேயிலை தூளின் வரத்து வெகுவாக குறைந்தது. இந்தாண்டு இதுவரை நடத்தப்பட்ட 36 ஏலங்களில் இதுவே குறைந்தபட்ச வரத்து; வரத்து குறைந்தும் தேவை அதிகரிக்கவில்லை. வர்த்தகத்தில் நிலையற்ற தன்மை நிலவிய போதும், விவசாயிகள் வழங்கிய பசுந்தேயிலைக்கு பல இடங்களில் கட்டுப்படியான விலை வழங்கப்பட்டது. கிலோ பசுந்தேயிலைக்கு 8 -10 ரூபாய் வரை விலை வழங்கப்பட்டது.

**விலையில் மாற்றம் இல்லாத அரிசி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 14,2010,22:37 IST

மதுரை: மதுரையில் இரு மாதங்களாக அரிசி விலையில் மாற்றம் இல்லை. அதேசமயம் மொத்தம் மற்றும் சில்லரை கடைகளில் ஒரு ரூபாய் முதல் மூன்று ரூபாய் வரை விலை மாறுபடுகிறது. "தீபாவளி வரை விலையில் மாற்றம் இருக்க வாய்ப்பில்லை' என்கின்றனர் வியாபாரிகள்.அரிசி விலை குறித்து, ஆலை உரிமையாளர் சங்க செயலாளர் சந்திரன் கூறியதாவது :கர்நாடக பொன்னி பழசு 38.50 ரூபாய், புதுசு 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. டீலக்ஸ் பொன்னி பழசு 32.50 ரூபாய்க்கும், புதுசு 25 ரூபாய்க்கும், வெள்ளை பொன்னி பழசு 35.50, புதுசு 27க்கும், செல்லப் பொன்னி பழசு 23.50, புதுசு 21க்கும் விற்கப்படுகிறது. ஐ.ஆர்.இருபது பழசு 23 ரூபாய், புதுசு 21லிருந்து 22 ரூபாய், ஐ.ஆர். 36 பழசு 22 ரூபாய், புதுசு 20லிருந்து 21 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பச்சரிசி சூப்பர் சன்னம் முதல் ரகம் 37 ரூபாய், அடுத்த ரகம் 30, புதுசு 28லிருந்து 29 ரூபாய், மாவு பச்சரிசி பழசு 21, பிரியாணி அரிசி முதல் ரகம் 53, புதுசு 46 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது, என்றார்.

**நிலக்கடலை விவசாயிகள் கவனத்திற்கு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 15,2010,00:13 IST

காரைக்குடி: வேளாண் உதவி இயக்குனர் கணேசன் அறிக்கை:கல்லல் ஒன்றியம் வெற்றியூர், கம்பனூர், கே.வலையபட்டியில் நிலக்கடலை, 200 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட் டுள்ளது. தற்போதைய மழையை பயன்படுத்தி முதல் களை எடுப்பு பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இப்பணி முடிந்தவுடன் எக்டேருக்கு 200 கிலோ ஜிப்சம் உரத்தை இட்டு, மண் அணை கட்ட வேண்டும். இவ்வாறு செய்யும் போது விழுதுகள் பூமியில் இறங்கி பருத்த நிலக்கடலை கிடைக்கும்; மகசூல் அதிகரிக்கும். விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் ஜிப்சம் உரம் கிடைக்கிறது. விபரங்களுக்கு வேளாண் உதவி இயக்குனரை தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**டிரான்ஸ்பார்மர் பழுதுவிவசாயிகள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 15,2010,00:12 IST

ஸ்ரீவில்லிபுத்தூர்:மம்சாபுரம் அருகே டிரான்ஸ்பார்மர் பழுதால் மின் மோட்டார்கள் இயங் காததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.மம்சாபுரம் காந்திநகர் பகுதியில் டிரான்ஸ்பார்மர் கடந்த இரு வாரங்களுக்கு முன் பழுதானது. இதனால் அப்பகுதி வீடுகளுக்கு மட்டும் மின்சாரம் மாற்றி கொடுக்கப்பட்டது. ஆனால் விவசாயத்திற்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. இதனால் விவசாய பயிர்கள் பாதிக்கப் பட்டுள்ளன.இது குறித்து மாரியப்பன் கூறியதாவது: கடந்த இரு வாரங்களுக்கு முன் டிரான்ஸ்பார்மர் எரிந்து போனது.

இதனால் விவசாய மின் மோட்டாருக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டது. கடும் வறட்சியால் கிணறுகளில் குறைந்தளவே தண்ணீரே உள்ளது. மின்சாரமின்றி கடந்த 20 நாட்களாக பயிர்களுக்கு பாய்ச்சாததால் இப்பகுதியில் 80க்கும் மேற்பட்ட ஏக்கர்களில் பயிரிடப்பட்டுள்ளகரும்பு, கிரேந்தி, தென்னை போன்றவை காயும் நிலை ஏற்பட் டுள்ளது. எனவே மின்சாரம் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது புதிய டிரான்ஸ்பார்மர் அமைக்க வேண்டும்,என்றார்.இதுகுறித்து மின்வாரிய அதிகாரிகள் கூறுகையில், "விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்,' என்றனர்.

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 15,2010,00:00 IST



**மா மரத்தில் இனை படர்வு மேலாண்மை:** மாமரத்தில் இனைப்படர்வு மேலாண்மை அல்லது கவாத்து ஒவ்வொரு ஆண்டும் அறுவடை செய்தபின் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதால் வரும் ஆண்டுக்கு தேவையான இளந்தளிர் உற்பத்தியை ஊக்குவித்து விளைச்சலை பெருக்க முடியும். ஆண்டுதோறும் கவாத்து செய்வதால் தோட்டத்தினை நன்குபராமரிக்க இயலும்.

மரத்தின் வயது இனைப்படர்வை பொறுத்து மா மரத் தோட்டங்களை 3 வகையாகப் பிரிக்கலாம்.

* இளந்தோட்டம் - 5 முதல் 10 ஆண்டுகள் வரை
* நன்கு விளைச்சலைத் தரக்கூடிய தோட்டம் - 10 முதல் 25 ஆண்டுகள் வரை
* வயதான உற்பத்தி குறைவான தோட்டம் - 25 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள மரங்கள்

கவாத்து செய்யும் காலம் - அறுவடைக்குப் பிறகு ஜூன் முதல் ஆகஸ்ட் வரை

இளந்தோட்ட கவாத்து முறை

* கூர்மையான கத்தியைக் கொண்டு தோல் பகுதியில் காயம் ஏற்படாதவாறு குறுக்கும் நெடுக்குமான கிளைகளை வெட்டவேண்டும்.
* மா மரத்தின் நடுவில் மேல்நோக்கி வளர்ந்த ஓரிரு கிளகைளை வெட்டுவதன்மூலம் சூரிய வெளிச்சம் ஊடுருவ ஏதுவாக இருக்கும். மேலும் வளர்ச்சியும் மட்டுப்பட்டு பரந்து வளர ஏதுவாக இருக்கும்.
* மரத்தின் உள்பகுதியில் அதனை அடுத்த தண்டுப்பகுதியில் காணப்படும் தேவையற்ற கிளைகளை அகற்ற வேண்டும்.
* அதிக துளிர்விடும் நுனிக்கிளைகளில் திடகாத்திரமான இரண்டு அல்லது மூன்று கிளைகளைவிட்டு மீதமுள்ள துளிர்களை நீக்கிவிட வேண்டும்.
* பொதுவாக 25-30 சதவீத கடந்தவருட கிளைகளை நீக்க வேண்டும்.

விளைச்சல் தரக்கூடிய தோட்டம்: நடுப்பகுதியில் இருந்து வளர்ந்த ஒன்று (அ) இரண்டு மேல்நோக்கி வளர்ந்த கிளைகளைக் குறைப்பதன் மூலம் மரத்தின் உயரம் குறைக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் சூரிய வெளிச்சம் உள்ளே கிளைகளுக்கு கிடைத்து ஒளிச்சேர்க்கை எளிதாக நடைபெறுகிறது.

* மரத்தின் உள்பகுதியில் அதனை அடுத்த தண்டுப்பகுதியில் காணப்படும் தேவையற்ற கிளைகளை அகற்ற வேண்டும்.

* நுனிக்கிளைகளில் திடகாத்திரமான 2-3 கிளைகளை விட்டுவிட்டு மீதமுள்ள துளிர்களை நீக்கிவிட வேண்டும்.

* கிளைகளை வெட்டும்போது அதன் பட்டைகளுக்குச் சேதம் ஏற்படாதவாறு கிளையின் அடிப்பாகத்தில் லேசான வெட்டுக்கொடுத்து பின் அகற்ற வேண்டும்.

* காய் பிடித்த மரங்களில் இனைப் படர்வு மேலாண்மை செய்யும்போது 25 சதவீத கடந்தவருட வளர்ச்சியை நீக்குவதன்மூலம் மீதமுள்ள கிளைகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கலாம்.

வயதான உற்பத்தி இல்லாத தோட்டம்: காய்பிடிக்கும் தன்மையை தொடர்ந்து கவனித்துவருவதன் மூலம் கண்டறியலாம். மரங்களில் தேவையற்ற பக்க கிளைகளை நீக்க வேண்டும். நடுப்பகுதியில் இருந்து வளர்ந்த ஒன்று (அ) இரண்டு மேல்நோக்கி வளர்ந்த கிளைகளைக் குறைப்பதன் மூலம் மரத்தின் உயரம் குறைக்கப்படுவதோடு சூரிய வெளிச்சம் உள்ளே கிளைகளுக்குக் கிடைத்து ஒளிச்சேர்க்கை எளிதாக நடைபெறுகிறது. மரத்தின் உள்பகுதியில் மற்றும் அதனை அடுத்த தண்டுப்பகுதியில் காணப்படும் தேவையற்ற கிளைகளை அகற்ற வேண்டும். பொதுவாக 30-40 சதவீத வளர்ச்சியை நீக்குவதன்மூலம் புதிய கிளைகளை ஊக்குவித்து நல்ல மகசூல் பெறலாம்.

கவாத்துக்குப் பிந்தைய செய்நேர்த்தி: ஒவ்வொரு மரத்திற்கும் 2.5 கிலோ யூரியா, 6 கிலோ சூப்பர், 1.6 கிலோ பொட்டாஷ் இடவேண்டும். இதை உரத்தேவையின் பாதியளவு யூரியா, முழு அளவு சூப்பர், அரை அளவு பொட்டாஷ் உரங்களை பிப்ரவரி முதல் மார்ச் மாத இறுதிக்குள் இடவேண்டும். பின் நீர் பாய்ச்ச வேண்டும். கவாத்து செய்த பின்னர் மீதமுள்ள உரத்தினை இடவேண்டும்.

**(தகவல்: த.நா.பாலமோகன், சா.ராஜதுரை, பொ. மேகலா, பழத்துறை, தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், த.வே.ப.கழகம், கோவை-641 003). -டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**பொன்னாங்கண்ணி கீரை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 15,2010,00:00 IST



இக்கீரையில் "தங்கசத்து' உண்டுஎன்றும் இதனை முறைப்படி உண்டு வருபவரது உடல் தங்கம் போன்று உறுதியடையும் உண்மை என்றும் கூறுவர். இதனை "பொன் ஆம் காண் நீ" "இதனை உண்ண உன் உடல் பொன்னாக காண்பாய்' என்ற வழக்கிற்கேற்ப இந்த மூலிகையின் பெயர் அமைந்துள்ளது எனக்கூறுவர். இதனாலேயே இது கற்பக மூலிகை வகையில் சேர்க்கப்பட்டுள்ளது.
செழிப்பாய் வளர்ந்த பொன்னாங்கண்ணிக் கீரையைச் செம்மையாய் நெய்யில் வதக்கி, மிளகு, உப்பு கூட்டி, புளியை நீக்கி கற்ப முறைப்படி ஒரு மண்டலம் உட்கொள்ள, உடல் அழகுபெறும். பொன்னிறமடையும், கண் குளிர்ச்சி உண்டாகும். மேலும் நோயற்ற நீண்ட ஆயுளும் பெறலாம்.

**தொட்டிகளில் பராமரிப்பு:** பொன்னாங்கண்ணி மற்றும் கரிசலாங்கண்ணி கீரைகளை வேர்ச்செடி மற்றும் நுண்தண்டு மூலம் பயிர்பெருக்கம் செய்யலாம். வீடுகளில் எளிய முறையில் பராமரிக்கலாம். மண் தொட்டியில் மணல், மண்புழு உரம், வேப்பம் புண்ணாக்கு இவற்றை 3:1:1 விகிதத்தில் கலந்து தொட்டியில் நிரப்பி வேர்ச்செடிகள் அல்லது நுண்தண்டுகளை நடவேண்டும். பின்னர் பூவாளி வைத்து தண்ணீர் தெளிக்க வேண்டும். இதற்காக மண்புழு கம்போஸ்ட் ஆகியவற்றை பயன்படுத்தலாம். ஒவ்வொரு மண் தொட்டிக்கும் 500 கிராம் அளவு மண்புழு கம்போஸ்ட் உரத்துடன், நன்மை தரும் நுண்ணுயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, மைக்கோரைசா ஆகியவற்றை தொட்டிக்கு தலா 50 கிராம் வீதம் கலந்து ஆண்டுக்கு இரண்டு முறை (6 மாத இடைவெளியில் இடவேண்டும்).

**பாத்தியில் வளர்த்தல்:** மண்ணை நன்றாக வெட்டி 1 சதுர மீட்டர் பாத்திக்கு 2 கிலோ மக்கிய தொழு உரம் அல்லது மண்புழு உரத்தை இட்டு மண்ணுடன் கலக்கி இட அளவுக்கேற்ப சிறிய பாத்திகளை அமைக்கலாம். வேர்களை உடைய பக்கச் செடிகளை நடவுக்கு பயன்படுத்தலாம். பாத்தியில் ஒரு அடி இடைவெளியில் செடிகளை நடவு செய்வது நல்லது. தொட்டியில் பராமரிக்கும்போது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இயற்கை உரங்களான மண்புழு உரம் மற்றும் கம்போஸ்ட் (1 கிலோ / தொட்டிக்கு) இடவேண்டும்.

தொட்டியிலும் பாத்தியிலும் செடிகளுக்கு தகுந்த ஈரப்பதம் இருக்கும் வகையில் நீர் தெளிக்க வேண்டும். இலைகள் அதிகம் தழைத்து வர இயற்கை உரங்களான பஞ்சகாவ்யா (லிட்டருக்கு 3 மிலி அளவு) தெளிப்பது நல்லது. பஞ்சகாவ்யா தற்போது அனேக இடங்களிலும் கிடைக்கிறது. செடிகளை நட்ட 4வது மாதத்தில் இலைகளைத் தண்டுடன் கிள்ளி அறுவடை செய்யலாம். தரைமட்டத்திலிருந்து 5 செ.மீ. உயரத்தில் முழுச்செடியை வெட்டி எடுக்கலாம்.

**தொடர்புக்கு: 61, ஆர்.கே.ஆர்.நகர், தாராபுரம்-638 656. திருப்பூர்.**
**எம்.அகமது கபீர், பி.எஸ்சி (அக்ரி), எம்.பி.ஏ.,**
**வேளாண்மை ஆலோசகர், 93607 48542.**

**தமிழகத்தில் உளுந்து உற்பத்தியை அதிகரிக்க முயற்சிகள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 15,2010,00:00 IST



தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் நெல் தரிசில் சாகுபடி செய்யப்பட்டு வரும் ஆடுதுறை-5 உளுந்து ஒரு அதிசய ரகமாக திகழ்ந்துவருகிறது. நெல் தரிசில் இதர பயிர்களான சோயா மொச்சை, எள், பருத்தி போன்றவைகளும் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. கடந்த பல வருடங்களாக ஆடுதுறை 5 உளுந்துதான் சோயாமொச்சை, எள், பருத்தி போன்றவைகளைவிட சிறந்தது

என்பதை விவசாயிகளது அனுபவம் காட்டி வருகின்றது. கோடையில் பெய்யக்கூடிய மழையால் ஆடுதுறை 5 உளுந்து தவிர இதர பயிர்கள் பாதிக்கப்பட்டு மோசமான மகசூலினைக் கொடுத்ததால் விவசாயிகள் கவனம் முழுவதுமாக ஆடுதுறை 5 உளுந்தின்மீது திரும்பிவிட்டது. விவசாயிகள் மிக உற்சாகமாக உளுந்து சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். விவசாயிகள் குறுவைப் பட்டத்தில் நெல்லுக்கு பதில் உளுந்தினை சாகுபடி செய்து அதிக வருவாயினைப் பெற்று வருவதால் அரசாங்கத்தை குறுவைப் பட்டத்தில் உளுந்தினை சாகுபடி செய்ய கால்வாய் பாசனத்தை நிறுத்திக்கொள்ள வேண்டுகோள் விடுத்துவருகின்றனர்.

நாளுக்குநாள் உளுந்தின் மேல் விவசாயிகளது மோகம் அதிகரித்து வருவதால் விவசாய இலாகா இந்த தருணத்தில் உளுந்தில் பயிர்விளைச்சல் போட்டியை ஏற்படுத்தி அவர்களை மேலும் அதிக மகசூல் எடுக்க வைக்கவும், அதனால் உளுந்து உற்பத்தியை தமிழகத்தில் அதிகரிக்கவும் முயற்சிகள் எடுத்து நடைமுறைக்கு கொண்டுவந்துள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் பயிர் விளைச்சல் போட்டியில் ஆடுதுறை 5 உளுந்தில் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் இரண்டு விவசாயிகளை தேர்ந்தெடுக்க இருக்கின்றனர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளில் மாவட்ட அளவில் போட்டியில் சேர்ந்துள்ள திருக்காட்டுப்பள்ளி எஸ்.சுந்தரம் என்ற விவசாயி நிலத்தில் பயிரினை அறுவடை செய்து மகசூலினை அளந்தபோது அவருக்கு ஏக்கரில் 1,234 கிலோ மகசூல் கிட்டியதைக் குறித்துக் கொண்டுள்ளனர். இந்த வருடம் டிசம்பர் மாதத்தில் உளுந்து சாகுபடி செய்பவர்களது மகசூலினையும் பரிசோதித்து சாதனையாளர்களை விவசாய இலாகா தேர்ந்தெடுக்க உள்ளது. இது சமயம் விவசாயிகள் கீழ்க்கண்ட அட்டவணையை பார்க்கவும். இதில் 1991ம் வருடமும், 2010ம் வருடமும் விவசாயிகளுக்கு கிடைத்த மகசூலும் ஏக்கர் நிகர லாபமும் காட்டப்பட்டுள்ளன.

இரண்டு வருடங்களின்
சாகுபடி வரவு செலவு
விபரம் (ஒரு ஏக்கருக்கு)

| | 1991 | 2010 |
|---|---|---|
| விதை உளுந்து 10 கிலோ | 80.00 | 500.00 |
| விதை நேர்த்தி | 8.00 | 50.00 |
| உழவு | 300.00 | 1,000.00 |
| விதைப்பு | 17.00 | 50.00 |
| வாய்க்கால், பார் போட | 90.00 | 300.00 |
| பாசனம் | 250.00 | 1,000.00 |
| களைக்கொல்லி | --- | 800.00 |
| களைக்கொல்லி தெளிக்க | --- | 200.00 |

| | | |
|---|---|---|
| அடி உரம் டீஏபி-50 கிலோ | 195.00 | 500.00 |
| மேல் உரம் டீஏபி தெளிப்பு | எம்ஏபி | |
| நுண்சத்து | | |
| பூச்சி மருந்து (20,40,70 நாட்கள்) | 176.00 | 1,500.00 |
| பூச்சி மருந்து தெளிக்க | 68.00 | 450.00 |
| களை எடுப்பு | 120.00 | 500.00 |
| அறுவடை | 228.00 | 800.00 |
| உளுந்து சுத்தம் செய்ய | 300.00 | 1,000.00 |
| காவல் | --- | 200.00 |
| இன கவர்ச்சிப்பொறி | --- | 200.00 |
| மொத்தம் | 2,132.00 | 10,050.00 |

| | | |
|---|---|---|
| விலை விபரம் | 1991 | 2010 |
| | 830 கிலோ து 10 =8,300.00 | 1,234 கிலோது55 = 67,870.00 |
| செலவு | 2,132.00 | 10,050.00 |
| நிகர லாபம் | 6,168.00 | 57,820.00 |

உளுந்து விவசாயத்தில் ஆடுதுறை 5 ரகம் கடந்த 20 வருடங்களாக விவசாயிகளை ஏமாற்றாமல் வாழவைத்து வருவதை பார்க்கலாம். மேலும் ஒரு ஏக்கரில் கிடைத்துள்ள நிகர லாபமும் எந்த அளவிற்கு உயர்ந்துள்ளது (கிட்டதட்ட 9 மடங்கு) என்பதையும் சாகுபடி முறைகளில் அடைந்துள்ள முன்னேற்றத்தையும் தெரிந்துகொள்ளலாம். விரைவில் மாவட்ட அளவிலும், மாநிலஅளவிலும் மிக அதிக மகசூலினை எடுத்த விவசாயிகளை நாம் தெரிந்துகொள்ள இருக்கின்றோம். பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொள்பவர்கள் கட்டணமாக ரூ.25 மாவட்ட அளவு போட்டிக்கும், ரூ.50 மாநில அளவில் நடத்தும் போட்டிக்கும் கட்டவேண்டும். மாவட்ட அளவில் முதல் பரிசு ரூ.10,000, இரண்டாவது பரிசு ரூ.5,000 கொடுக்கப்படும். மாநில அளவில் முதல் பரிசு ரூ.15,000, இரண்டாவது பரிசு ரூ.10,000 கொடுக்கப் படும். உளுந்தில் நடத்திவரும் பயிர் விளைச்சல் போட்டியை குறுவை நெல்லிலும் விவசாய இலாகா செய்ய உள்ளது. தமிழகத்தில் நல்ல முறையில் விவசாய வளர்ச்சி ஏற்பட்டு வருகின்றது.

**-எஸ்.எஸ்.நாகராஜன்.**

**வெளிநாடுகளில் தேவை உயர்ந்து வருவதால் இந்தியாவில் சீரகம் விலை 15 சதவீதம் உயர வாய்ப்பு**



*ரிதுராஜ் திவாரி*

*இக்கனாமிக் டைம்ஸ் ஆய்வு பிரிவு*

*உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் சீரகத்திற்கான தேவைப்பாடு அதிகரித்து வருகிறது. இதர நாடுகளிலிருந்து சீரகத்தை இறக்குமதி செய்து வந்த பாகிஸ்தான், வங்காளதேசம் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் தற்போது, இந்தியாவிலிருந்து சீரகத்தை இறக்குமதி செய்ய தயாராகி வருகின்றன. இதனையடுத்து, இம்மாதத்திலும் வரும் அக்டோபர் மாதத்திலும் இதன் விலை 10–15 சதவீதம் உயரும் என இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.*

*தீபாவளி*

*இந்நிலையில் தீபாவளியை முன்னிட்டு, உள்நாட்டில் இதன் விற்பனை அதிகரித்து வருகிறது. வரும் 2010–ஆம் ஆண்டு பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் தான் புதிதாக சீரகம் சந்தைகளுக்கு விற்பனைக்கு வரும். எனவே இந்த விலை உயர்வு தொடர்ந்து நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே இது, சீரகம் பயிரிடும் விவசாயிகளுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாகும்.*

*சீரகத்தின் உற்பத்தியில் மட்டுமின்றி, பயன்பாட்டிலும் உலக அளவில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இந்தியா அதன் மொத்த உற்பத்தியில் 75–80 சதவீதத்தை பயன்படுத்தி விட்டு 25–20 சதவீதத்தை மட்டுமே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. அதேசமயம் இந்தியாவுக்கு அடுத்த படியாக சீரகம் உற்பத்தியில் முன்னிலை வகித்து வரும் சிரியா, சீனா, துருக்கி மற்றும்*

ஈரான் ஆகிய நாடுகள் அவற்றின் உற்பத்தியில் பெரும்பகுதியை ஏற்றுமதி செய்கின்றன. இந்நிலையில் சிரியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் உற்பத்தி சரிவடைந்து சீரகம் கையிருப்பும் முறையே 20,000 டன் மற்றும் 15,000 டன்னாக குறைந்துள்ளது. இதனால் இந்திய சீரகத்திற்கு வெளிநாடுகளில் வரவேற்பு அதிகரித்துள்ளது. எனவே இந்த வாய்ப்பை பயன்படுத்திடும் வகையில் இந்திய நிறுவனங்கள், சீரகம் ஏற்றுமதியை அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நறுமணப் பொருள்கள்

நாட்டின் நறுமணப் பொருள்களில் சீரகமும் ஒன்றாகும். சீரகம் மட்டுமின்றி மிளகு, வெந்தயம், இஞ்சி, மிளகாய் போன்றவற்றின் ஏற்றுமதியும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனையடுத்து நடப்பு நிதி ஆண்டில் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி ஒட்டு மொத்தத்தில் 15 சதவீதம் அதிகரிக்கும் என முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து ஆண்டுதோறும் 50,000 டன் சீரகம் ஏற்றுமதி ஆகிறது. நடப்பு நிதி ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் சீரகம் ஏற்றுமதி, சென்ற நிதி ஆண்டின் இதே மாதங்களைக் காட்டிலும் 19 சதவீதம் சரிவடைந்து 13.500 டன்னாக குறைந்துள்ளது. அதேசமயம், வெளிநாடுகளில் தேவைப்பாடு அதிகரித்து வருவதால் வரும் மாதங்களில் சீரகம் ஏற்றுமதி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச அளவில் சீரகம் ஏற்றுமதி ஆண்டிற்கு 75,600 டன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் இந்தியாவின் பங்களிப்பு 60 சதவீதமாகவும், சிரியா, ஈரான், துருக்கி ஆகிய நாடுகளின் பங்களிப்பு முறையே 13 சதவீதம், 7 சதவீதம் மற்றும் 6.5 சதவீதமாக உள்ளது. இதர நாடுகளின் பங்களிப்பு 13 சதவீதமாக உள்ளது. இதர நாடுகளுடன் ஒப்பிடும்போது, வெளிநாடுகளில் நம்நாட்டின் சீரகத்திற்கு நல்ல விலை கிடைக்கிறது. சர்வதேச சந்தைகளில் இந்தியாவின் சீரகத்திற்கு டன் ஒன்றிற்கு 3,000 டாலர் விலை கிடைக்கிறது. அதேசமயம் இந்த சந்தைகளில் சீனா, துருக்கி மற்றும் சிரியா ஆகிய நாடுகளின் ஒரு டன் சீரகம் முறையே 2,700 டாலர் 2,850 டாலர் மற்றும் 2,950 டாலர் என்ற விலையில் விற்பனை ஆகிறது.இது, நம் நாட்டின் சீரகத்திற்கு வெளிநாடுகளில் கிடைத்து வரும் வரவேற்பை எடுத்து காட்டுகிறது.

பயிரிடும் பரப்பளவு

சென்ற 2009–ஆம் ஆண்டில் சீரகம் பயிரிடும் பரப்பளவு 4 லட்சம் ஹெக்டேராக இருந்தது. இது, நடப்பு ஆண்டில் 25 சதவீதம் அதிகரித்து 5 லட்சம் ஹெக்டேராக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் தென்மேற்கு பருவமழையும் நன்றாக உள்ளது. எனவே இவ்வாண்டில் நாட்டின் சீரகம் உற்பத்தி 3 லட்சம் டன்னைத் தாண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனையடுத்து சீரகத்தை அதிக அளவில் பயிரிடும் ராஜஸ்தான் மாநிலத்தின் நாகார் மற்றும் குஜராத் மாநிலத்தின் உஞ்ஹா ஆகிய பகுதிகளைசேர்ந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கையிருப்பு

சீரகம் விலை உயர்வதற்கான வாய்ப்புகள் குறித்து அன்னபூர்ணா டிரேடர்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த கே.ஜி.ஜலானி கூறுகையில், “சென்ற ஆண்டில் சீரகம் உற்பத்தி குறைவாக இருந்ததால்,

அவ்வாண்டு இறுதியில் கையிருப்பு குறைந்துள்ளது. எனவே சீரகம் ஏற்றுமதி அதிகரிக்கும் நிலையில், உள்நாட்டில் அளிப்பு குறைந்து அதன் விலை உயர வாய்ப்புள்ளது" என்று தெரிவித்தார். உள்நாட்டில் 60 கிலோ மூட்டை சீரகத்தின் விலை ரூ.2,600–ஆக உள்ளது.

**நடப்பு ஆண்டு கரீஃப் பருவத்தில் பருப்பு வகைகள் உற்பத்தி 10 லட்சம் டன் அதிகரிக்கும்**

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புஅதுடெல்லி

பயிரிடும் பரப்பளவு அதிகரித்துள்ளதால், நடப்பு ஆண்டின் கரீஃப் பருவத்தில் பருப்பு வகைகள் உற்பத்தி 10 லட்சம் டன் அதிகரித்து 53 லட்சம் டன்னாக உயரும் என மத்திய அரசின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதனையடுத்து, பருப்பு வகைகள் விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது.

ஆந்திரபிரதேசம், கர்நாடகா, குஜராத், மத்தியபிரதேசம், மகாராஷ்டிரா, ஒரிசா, ராஜஸ்தான் மற்றும் உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள், பருப்பு வகைகள் பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனையடுத்து, நடப்பு ஆண்டு கரீஃப் பருவத்தில், பருப்பு வகைகள் பயிரிடும் பரப்பளவு, சென்ற ஆண்டின் கரீஃப் பருவத்தைக் காட்டிலும் 22 சதவீதம் அதிகரித்து 90.57 லட்சம் ஹெக்டேரிலிருந்து 1.10 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது.

வறட்சி

இதுபோன்ற காரணங்களால், நடப்பு ஆண்டு கரீஃப் பருவத்தில் பருப்பு வகைகள் உற்பத்தி, சென்ற ஆண்டின் இதே பருவத்தைக் காட்டிலும் 23 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற ஆண்டில், கடும் வறட்சி நிலவியதையடுத்து, அவ்வாண்டின் கரீஃப் பருவத்தில் இவற்றின் உற்பத்தி, அதற்கு முந்தைய ஆண்டின் பருவத்தைக் காட்டிலும் 8.3 சதவீதம் குறைந்து 46.90 லட்சம் டன்னிலிருந்து 43 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. சென்ற 2009–10–ஆம் பருவத்தில் (ஏப்ரல்–மார்ச்) பருப்பு வகைகள் உற்பத்தி 1.46 கோடி டன்னாக இருந்தது.

நடப்பு 11–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2007–2012) பருப்பு வகைகள் உற்பத்தியை 20 லட்சம் டன் அதிகரிக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயம் செய்துள்ளது.

**பட்டா வழங்க கோரிக்கை: சிறு விவசாயிகள் நலச்சங்கம் முதல்–அமைச்சருக்கு மனு**

கோத்தகிரி, செப்.15–

முதல்–அமைச்சருக்கு மலை மாவட்ட சிறு விவசாயிகள் நலச்சங்க தலைவர் தும்பூர் ஐ போஜன் அனுப்பியுள்ள மனுவில் தெரிவித்துள்ளதாவது:–

நீலகிரி மாவட்டத்தின் பெரும்பான்மையாக வாழும் படுகர் இனத்தவரும், பழங்குடியினருமே நில உடைமைதாரர்களாக உள்ளனர். பழங்குடியினருக்கு தனியாக நில புலன்கள் ஒதுக்கப்

பட்டு உள்ளன. ஆங்கிலேயர்களால் வழங்கப்பட்ட நிலப்புலன்களை படுக இன மக்கள் தலைமுறை, தலைமுறையாக அனுபவித்து வருகின்றனர். பாகப்பிரிவினை எழுத்து மூலமாக ஆவணங்கள் இல்லாமல் சமூக வழக்கப்படி நடந்து வருகிறது.

1965–ம் ஆண்டு நடைமுறைக்கு வந்த மறு நில அளவை திட்டம் முடிவடைந்து 1987–ம் ஆண்டு ஆவணங்கள் ஒப்படைக்கப்பட் போது நிலவரி திட்டம் நடைமுறைப்படுத்தாமல் வருவாய் பின் தொடர் பணி கொண்டு வரப்பட்டு உத்தேச பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. உத்தேச பட்டா, சிட்டாவில் இருந்த மூதாதையர் பெண்களை சேர்க்கப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டதால் 1965 முதல் 1987–ம் ஆண்டு வரையில் சொத்து மாற்றங்கள் எதுவும் அங்கீகரிக்கப்படவில்லை. மூதாதையர்களின் பெயரிலேயே பட்டாக்கள் இருப்பதால் வங்கி கடன், அரசு மானியங்கள் போன்ற எதையும் பெற முடிவதில்லை. மறு நில வரித்திட்டம் கொண்டு வரப்பட்டு இதர மாவட்டங்களில் நில உடமைதாரர்களுக்கு பட்டா பாஸ் புத்தகங்கள் வழங்கப் பட்டுள்ளன. நில உடமை மேம்பாட்டு திட்டம் மூலம் நீலகிரி மாவட்டத்திற்கு தனியாக சிறப்பு திட்டமாக கொண்டு வந்து முன்னோர்களின் பெயர்களில் உள்ள நிலங்கள் தற்போதைய அனுபவதாரர் பெயர்களில் பட்டா வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

## கூடலூர் பகுதியில் தேயிலைக்கு அடுத்தபடியாக

# இஞ்சி பயிர்களை தாக்கும் பழுப்பு நிற அழுகல் நோயால் விவசாயிகள் கவலை

கூடலூர், செப்.15-

கூடலூர் பகுதியில் மாறி வரும் காலநிலையால் தேயிலை செடிகளில் கொப்புள நோய்களும், இஞ்சி செடிகளில் பழுப்பு நிற அழுகல் நோய் தாக்குதல்களும் அதிகரித்துள்ளன. இதனால் விவசாயிகள் மத்தியில் சோகம் தொடர்ந்து வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை, காபி, குறுமிளகு, ஏலக்காய், கிராம்பு உள்ளிட்ட பணப்பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன.

### கொப்புள நோய்

குறிப்பாக கூடலூர் பகுதியில் தேயிலைக்கு அடுத்தபடியாக காபி, குறுமிளகு, ஏலக்காய், இஞ்சி, கிராம்பு உள்பட வாசனை திரவிய பொருட்களும் விளைகின்றன. கடந்த சில ஆண்டுகளாக பச்சை தேயிலைக்கு போதிய விலை கிடைக்காததால் பிற பயிர்களை விவசாயம் செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்ட தொடங்கினர்.

இந்த நிலையில் கடந்த சில மாதங்கள் வரை பச்சை தேயிலைக்கு பரவலான விலை கிடைத்து வந்தது. இதனால் தேயிலை விவசாயிகள் மத்தியில் சற்று ஆறுதல் ஏற்பட்டது. ஆனால் தற்போது பச்சை தேயிலை விலை மீண்டும் குறைந்து விட்டதால் கொழுந்து எடுக்ககூட விவசாயிகள் முன் வருவதில்லை. இதற்கிடையே கூடலூர் பகுதியில் அடிக்கடி கால நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இதனால் தேயிலை செடிகளில் கொப்புள நோய் தாக்குதல் அதிகரித்துள்ளன. இதனால் தேயிலை விவசாயிகள் கலக்கத்துடன் இருந்து வருகின்றனர்.

### இஞ்சி பயிர்களை தாக்கும் பழுப்பு நிற அழுகல் நோய்

இந்த சூழ்நிலையில் கூடலூர் பகுதியில் இஞ்சி பயிர்களை பழுப்பு நிற அழுகல் நோய் தாக்கி வருகின்றன. தேயிலைக்கு மாற்றாக இஞ்சி உள்பட மலை பிரதேச காய்கறிகளை விவசாயம்செய்து வந்த விவசாயிகளுக்கு தொடர் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

கூடலூர் நெம்பாலக்கோட்டை, மண்வயல், தொரப்பள்ளி ஆகிய பகுதிகளில் பழுப்பு நிற அழுகல் நோய் தாக்குதல் அதிகரித்துள்ளன. தற்போது இஞ்சி பயிர்கள் நன்கு விளைந்து வருகின்ற நேரத்தில் இந்த நோய் தாக்கி இஞ்சி செடியின் அடிப்பாகம் முழுவதும் அழுகி பழுப்பு நிறத்தில் மாறுகின்றன. இதனால் இஞ்சி பயிர்கள் பெருமளவு நாசமாகி வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இந்த நோயை கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட துறையினர் எந்தவித நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை என விவசாயிகள் ஆதங்கத்துடன் தெரிவித்துள்ளனர். எனவே சம்பந்தப்பட்ட துறைஉயர் அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு இஞ்சி விவசாயிகளை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.



கூடலூர் நெம்பாலக்கோட்டையில் இஞ்சி செடிகள் பழுப்பு நிறத்தில் மாறி உள்ளதை படத்தில் காணலாம்.

# விவசாயிகள் வரவில்லை- மூடுவிழாவிற்கு காத்திருக்கும் திருமங்கலம் உழவர் சந்தை

திருமங்கலம், *செப்.15–*

முறையாக திட்டமிடாததால் மாவட்ட கலெக்டர் திறந்துவைத்த சில நாட்களிலேயே....

பொதுமக்களின் ஆதரவின்றி நான்காவது முறையாக மூடுவிழாவிற்கு காத்திருக்கிறது திருமங்கலம் உழவர் சந்தை. கடந்த தி.மு.க. ஆட்சியின்போது திருமங்கலம் நகரின் சுடுகாட்டிற்கு செல்லும் வழியில் அமைந்துள்ள சந்தைப்பேட்டையில் உழவர் சந்தை அமைக்கப்பட்டது. இதனை அப்போதைய தி.மு.க. அரசின் சபாநாயகர் பி..ஆர்.பழனிவேல்ராஜன் திறந்துவைத்தார்.
நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகளை கொண்டு கடைகள் அமைத்து செயல்பட்ட உழவர்சந்தை ஊருக்கு ஒதுக்குப்புறமாக இருந்ததாலும், சமூக விரோதிகள் நடமாட்டத்தாலும் காலப்போக்கில் தள்ளாடத்துவங்கி மூடப்பட்டுவிட்டது. இதைத் தொடர்ந்து தி.மு.க. அரசினால் மூன்று முறை துவங்கப்பட்ட உழவர்சந்தை பொதுமக்களிடையே வரவேற்பை பெறாததால் தொடர்ந்து மூன்று முறை மூடுவிழா கண்டது.

இந்நிலையில் தேர்தல் நெருங்கிவருவதால் தமிழகம் முழுவதிலும் மூடப்பட்டு கிடக்கும் உழவர் சந்தைகளுக்கு உயிரூட்டிட தி.மு.க. அரசு முடிவு செய்தது. அதன்படி கடந்த மாதம் 9-ம் தேதி திருமங்கலம் உழவர் சந்தையை எம்.எல்.ஏ. லதா அதியமான் முன்னிலையில், மதுரை கலெக்டர் காமராஜ் நான்காவது முறையாக திறந்துவைத்தார். அப்போது சுமார் 40 க்கும் மேற்பட்ட விவசாயிகளைக் கொண்டு காய்கறி கடைகள் அமைக்கப்பட்டிருந்தது. எனினும் உழவர் சந்தை துவங்கிய சில நாட்களிலே பொதுமக்கள் ஆதரவில்லாததால், விரக்தியடைந்த காய்கறி விற்கும் விவசாயிகள் தலைதப்பியது தம்பிரான் புண்ணியம் என்று அலறியடித்தபடி கடைகளை மூடிவிட்டு எஸ்கேப் ஆகிவிட்டனர்.

இதன் எதிரொலியாக வெற்றிகரமாக நான்காவது முறையாக திருமங்கலம் உழவர் சந்தை மூடுவிழாவிற்கு காத்திருக்கிறது.

எனினும் உழவர் சந்தை கண்காணிப்பிற்காக பணியமர்த்தப்பட்ட வேளாண் அதிகாரிகள் காய்கறிகளை சுமந்துகொண்டு விவசாயிகள் எவரேனும் கடைபோட வருகிறார்களா என்றும், காலியாக கிடக்கும் கடைகளில் காய்கறிகளை வாங்க பொதுமக்கள் யாரேனும் வருகிறார்களா எனவும் வழிமேல் விழிவைத்து காத்துக்கிடக்கின்றனர். தொடர்ந்து 4-வது முறையாக திருமங்கலம் உழவர் சந்தை மூடும் நிலைக்கு வந்ததற்கு அதிகாரிகள் முறையாக திட்டமிடாமல் செயல்பட்டதுதான் காரணம் என்று பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

**வானிலை**

**கோவை**

**21⁰**



தெளிவாக இருக்கும்

| | |
|---|---|
| காற்றின் வேகம் | 2கி.மீ/மணிக்கு |
| அதிக அளவு : | 20 |
| குறைந்த அளவு : | 21 |

வானம் மேகமூட்டமாக இருக்கும்